அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 02/2021

எனது இலக்கம்: EST-6/03/LEA/3381
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2021.03.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்

## அரச சேவையைத் தடையின்றி நடாத்திச் செல்லல்

மேற்படி தலைப்பைக் கொண்ட EST-1/MISCL/06/0032 ஆம் இலக்கத்தையும் 2020.10.28 ஆம் திகதியையும் கொண்டதாக வெளியிடப்பட்ட 20/2020 ஆம் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

02. கொவிட் 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சிகளுடன் இணைந்த வகையில் ஏனைய அரச சேவைகளையும் தடங்கலின்றி நடாத்திச் செல்வதற்காக 2021.03.08 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரச துறையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களையும் வழமை போன்று சேவைக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

03. அத்துடன் கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களின் தலைவர்கள் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள் அடங்கியதாக சனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள 2020.04.18 ஆம் திகதிய PS/GPA/චක්‍රලේඛ/20/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கை, 2020.05.14 ஆம் திகதிய PS/GPA/චක්‍රලේඛ/21/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கை மற்றும் 2020.10.29 ஆம் திகதிய PS/GPA/චක්‍රලේඛ/33/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கை ஆகிய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களை பணிக்கு அழைப்பதை வரையறுப்பது தொடர்பான அறிவுறுத்தல்களைத் தவிர அரசாங்க ஊழியர்களினதும் பொது மக்களினதும் சுகாதாரப் பாதுகாப்புக்காகப் பின்பற்ற வேண்டிய ஏனைய சுகாதார அறிவுறுத்தல்களைத் தொடர்ந்தும் அவற்றில் உள்ளவாறே பின்பற்றுதல் வேண்டும்.

04. மேலே இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க உரிய சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நிறுவனத்தின் ஊழியர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் கொவிட் 19 வைரஸ் தொற்றுவதைத் தவிர்த்து சேவைகளை வழங்கும் பொறுப்பு நிறுவனங்களின் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

05. 2021.03.08 ஆம் திகதி முதல் லீவுகள் தொடர்பில் வழமையான ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

06. 2020.03.13 ஆம் திகதியின் பின்னர் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு இணங்க சேவை வழங்கலை தற்காலிகமாக இடைநிறுத்திய அரச நிறுவனங்கள், மீண்டும் வழமையான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக 2021.03.08 ஆம் திகதி வரை அடிக்கடி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கச் செயற்பட்டு, அரச உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைத்த காலப் பகுதியில் அவர்கள் பெற்ற லீவுகளை அவர்களின் சேவைகளை நிரந்தரமாக்குதல், தரமுயர்வு வழங்குதல், ஓய்வுபெறச் செய்தல் போன்ற செயற்பாடுகளின் போது ஏற்புடையதாக்குவது தொடர்பான அறிவுறுத்தல்கள் பின்னர் வெளியிடப்படும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு